[22nd November 1963

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த சம்பவத்தில் ஆண் மாண வர்கள் பெண் மாணவிகள் பேரில் ராகிங் நடத்தியதாகவும், அது பத்திரிகையில் போட்ட பின்னர் மாணவிகளின் தாய் தந்தையர் தங்களுடைய பெண்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அந்த பிரின்ஸிபால் அதை மூடி மறைப்பதற்காக அத்தகைய ஸ்டேட் மெண்டை வாங்கினரா என்று அமைச்சர் விளக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாணவிகளை மூடி மறைப்பதற்காக அம்மாதிரி ஸ்டேட்மெண்ட் வாங்கவில்லை. என்க்வயரிக்குப் பிறகு மாணவியோ, அவர்களுடைய தாய் தந்தையரோ கூறியதன் பேரில் அவர்களாக வந்து பத்திரிகையில் வெளிவந்த அளவு 'ராகிங்' நடக்கவில்லை என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்தார்கள்.

MR. SPEAKER : Probably she was not prepared for an enquiry.

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு.

* 421 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மருத்துவக் கல்லூரி, எஞ்சினீரிங் கல்லூரி ஆகியவற் றில் சேருவதற்காக **Nativity Certificate** அந்தந்த மாவட்டத்தில் குடி இல்லாதவர் சிலர் வாங்கியதாக அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இந்த இரண்டு கல்லூரிப் படிப்புக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பிரசுரம் செய்வதற்கு முன்பாக போலீஸ்**C.I.D.** மூலமாக அவ்வித **Nativity Certificate** பரிசீலிக்கப்படும் உத்தேச முண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) An anonymous petition and a telegram alleging production of false nativity certificates were received by the Selection Committee in respect of admissions to Medical Colleges.

(*b*) No.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், இந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கவேண்டுமென்ற காரணத்தினல் பிற மாநிலங்களிலிருந்து மாணவர்கள் நம் மாநில நேடிவிடி ஸர்டிபிகேட் வாங்கும் முயற்சி யில் ஈடுபடுகிறார்கள். இம்மாதிரி தவறுகள் ஏற்படாமல் இருக்க சம்பந்தப்பட்ட தொகுதியிலிருக்கும் சட்டமன்ற உறுப்பினரிட மும் சர்டிபிகேட் வாங்கவேண்டும் என்று விதி போட முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மாதிரியாக அர சாங்கத்திடம் திட்டமில்லை.

* 422 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware that in 1963–64 the students applying

22nd November 1963]

for admission to Medical Colleges used nativity certificates as if they belonged to Salem district though they actually belonged to other districts and thus were able to get admission?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இல்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர சேலம் ஜில்லா நேடிவிடி ஸர்டிபிகேட் வாங்கி, 30 ஸீட்கள் வரை வேறு ஜில்லாக்காரர்கள் கொண்டு போனதாகவும், கிருஷ்ணகிரி லேடி டாக்டருக்கு ஒரு ஸீட் கிடைத்ததாகவும் அரசாங்கத்திற்குத் தகவல் வந்ததா? வந்திருந்தால், என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரியான தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஒரே ஒரு காண்டிடேட் ஆந்திராவிலிருந்து வந்தார். He belongs to the Reddi community அவரும் ஆந்திரா நேடிவிடி சர்டிபிகேட்தான் கொடுத்தார். ஃபால்ஸ் சர்டிபிகேட் எதுவும் கொடுக்கவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கிருஷ்ணகிரி லேடி டாக்டர் ஒரு சீட் வாங்கியிருக்கிறார் என்று சொல்கிறேன். அரசாங்கம் அதன் பேரில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அங்கத்தினர் அந்தத் தகவலை மடையிலாகக் கொடுத்தால் கவனிக்கப்படும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, ஒரு டெபுடி ரெஜிஸ்ட்டிரார் 13 ஆண்டு காலமாக சென்னையிலேயே உத்தியோகம் செய்திருந்தும் சேலம் என்று போட்டு தன் மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்த்திருக்கிறார் என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஒருவர் சென்னையிலேயே உத்தியோகம் செய்திருந்தாலும்கூட, நேடிவ் டிஸ்ட்ரிக்ட் சேலமாக இருந்து இருக்கலாம். ஒரு ஜில்லாக்காரர் வேறு இடங்களில் உத்தியோகம் செய்வதால் அவருடைய நேடிவிடி போய் விடாது.

மருத்துவப் படிப்பு.

* 423 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் மூன்றாண்டுப் பயிற்சிக்குப் பிறகு L.M.P. போன்றதொரு டிப்ளமா கொடுப்பதற்காக அரசாங்கம் உத்தேசித்துள்ளதா?

(இ) இல்லையெனில் கிராமப் புறங்களில் டாக்டர்கள் பற்றாக் குறையை எவ்வாறு தீர்க்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.